# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
# செய்தி வெளியீடு

*********

## தொகுதி 4 - தவறுதலாக தேர்வுக்கட்டணச்சலுகை கோரி தேர்வுக்கட்டணம் செலுத்தாமல் இருப்பவர்களுக்கு ஒரு வாய்ப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4 மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பதவிகளுக்கான அறிவிக்கை 14.11.2017 அன்று வெளியிட்டுள்ளது. இதற்கு விண்ணப்பிக்க கடைசி நாள் 13.12.2017 மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்த கடைசி நாள் 15.12.2017 ஆகும்.

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 ன் படி, பழங்குடியினர், பட்டியல் வகுப்பினர், பட்டியல் வகுப்பினர் (அருந்ததியர்) ஆதரவற்ற விதவைகள், மாற்றுத்திறனாளிகள் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து முற்றிலுமாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர். முன்னாள் இராணுவத்தினர் இரண்டு முறை தேர்வுக்கட்டண சலுகையினை பயன்படுத்திக்கொள்ளலாம்.

பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்). மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையின் 01.03.2017 நாளிட்ட அரசாணை எண் 32 ன் படி, பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) தேர்ச்சி பெற்றிருந்தாலே, மூன்று முறை தேர்வுக்கட்டண சலுகையினை பயன்படுத்திக்கொள்ளலாம்.

விண்ணப்பதாரர்கள், தொகுதி 4 தேர்வுக்கு தவறுதலாக தேர்வுக்கட்டணச்சலுகை கோரி விண்ணப்பித்திருந்து தற்போது தேர்வுக்கட்டணம் செலுத்த விரும்புபவர்கள் தங்களது விருப்பத்தினை மாற்றி தேர்வுக்கட்டணத்தை இணையவழி (Online) மட்டுமே செலுத்த வழி வகை செய்யப்பட்டுள்ளது. ஏனையோருக்கு இது பொருந்தாது.

இது ஒருமுறை வாய்ப்பாக (One Time Opportunity) மட்டுமே அளிக்கப்படும். இவ்வாறு தற்போது தேர்வுக்கட்டணச்லுகையின் விருப்பத்தை மாற்றி தேர்வுக்கட்டணம் செலுத்துபவர்கள், இந்த தொகுதி 4 தேர்வுக்கு தனது விருப்பத்தினை மாற்றி தேர்வுக்கட்டணச்சலுகையை மீண்டும் கோர முடியாது. மேலும் தங்களது விருப்பத்தினை மாற்றிய பின் தேர்வுக்கட்டணம் செலுத்தாமலோ அல்லது தொழில்நுட்பக் காரணம் உட்பட பல்வேறு காரணங்களினால் தேர்வுக்கட்டணம் செலுத்த முடியாமல் போனாலோ அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். எனவே விண்ணப்பதாரர்கள் தாங்கள் செலுத்திய கட்டணமும் விண்ணப்பமும் தேர்வாணையத்தால் ஏற்கப்பட்டுள்ளதா, என்பதை தேர்வாணையத்தின் இணையதளத்தில் தெரிந்து கொள்ளுமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இந்த சலுகை 14.11.2017 நாளிட்ட தொகுதி 4 அறிவிக்கை மற்றும் இதன் பின்னர் அறிவிக்கப்படும் அறிவிக்கைகளுக்கு மட்டுமே பொருந்தும்.**

செயலாளர்